TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of Integrity

## நகல்(05-01-2009)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கெதிராக மீண்டும் வலியுறுத்தும் தெரிவுக் குழுவின்கருத்துக்களுக்கான TISLஇன் பதில்

அரச சார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகள் அவற்றின் பாதிப்பு என்பவற்றை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழு அதன் இடைக்கால அறிக்கையைப் பாராளுமன்றத்திற்கு 2008 டிசம்பரில் சமர்ப்பித்துள்ளது. அறிக்கையில் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனலுக்கு எதிரான கருத்துக்கள் உள்ளன. அதனால் இந்தப்பதில் அறிக்கை வெளியாகிறது.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஊழலுக்கெதிரான தலைசிறந்த உலகலாவிய கூட்டமைப்பு.அது அரசாங்கங்கள், தனியார் துறை, உதவி வழங்குபவர்கள்.மற்றும் குழுக்களின் போக்குகளை பல்வேறு மட்டங்களில் , பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மாற்றியமைக்கும் கருவியாக உள்ளது. TISL இந்தக் கூட்டமைப்பின் உள்ளூர் பிரிவாகும். ஒரு தனித்த முழு அமைப்பாக உத்தரவாதங்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாக, TI என்னும் உலகளாவிய அயக்கத்திற்குப் பொறுப்புள்ளதாக அது இயங்குகிறது.

TISL ஏனைய தெற்காசிய TI அமைப்புக்களுடன் 2001 இல் கூட்டாக ஆய்வு நடத்தி தெற்காசியாவில் பொலிஸாரே ஆகக் கூடுதலான ஊழல்களில் ஈடுபடும் நிறுவனமாகப் பொதுமக்களின் பார்வையில் இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளது.

இதன் பயனாக ,பொலிஸ் ஊழலுக்குக் காரணமான விடயங்களை இனங்காண்பதற்கும் , பொலிஸ் - பொதுமக்கள் உறவை மேம்படுத்தவும், பொலிஸாரின் நேர்மைத்திறனை ஊக்குவிக்கவும் ஒரு திட்டத்தை TISL ஆரம்பித்தது.

அரசியல் யாப்பின் 28 (d) வாசகத்திற்குஅமைய ‘ பொதுச் சொத்தைப் பேணுவதற்கும் , பொதுச் சொத்தானது துஷ்பிரயோகம் செய்யப்படுவது அல்லது விரயமாக்கப்படுவதைத் தடுப்பதற்கும் பொது மக்களுக்குக் கடமையுள்ளது. பொலிஸ் ஒரு அரச நிறுவனம் அது அரச நிதியினால் நடத்தப்படுகிறது. இதனால் இந்நாட்டின் பிரஜைகளும் . பொலிஸாரும், பொலிஸில் ஊழல் நிலவாது காக்கும் கடமையைக் கொண்டுள்ளனர்.

இதுவே இலங்கையில் பொலிஸ் ஊழல் பற்றிய முதலாவது ஆய்வு நடவடிக்கையாகும். நாட்டில் பரிபாலனத்தை மேம்படுத்துவதற்கு இது ஒரு தனித்துவமான அரச சிவில் ஒன்றிணைப்பாகும். இனிப் பொலிஸ் திட்டம் என்று அழைக்கப்படவிருக்கும் ஒருங்கிணைந்த இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகச் செயற்படுவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் , பொலிஸாரின் பொலிஸ் மா அதிபரும் இணங்கியுள்ளனர்.

2007 மார்ச் 14ம் திகதியிடப்பட்ட அழைப்பாணை மூலம் TISL குழுவின் முன் சமூகமளிக்கும் படி அழைக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பாணையுடன், குழுவினருடன் தொடர்புள்ள விதிகள் என்று பெயரிடப்பட்ட ஆவணமும் இணைக்கப்பட்டிருந்தது. திரு. ஷமிந்ர பெர்ணான்டோவினால் எழுதப்பட்டு ஐலன்ட் புதினப்பத்திரிகையில் 2007 – 1 - 31 இல் பிரசுரிக்கப்பட்ட வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெறும் குழுக்கள் , தனி நபர்கள் பற்றித் தீர்க்கமான ஆய்வு அவசியம்'' என்ற கட்டுரையில் TISL க்கு எதிராகக் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் பற்றி மேலும் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு TIOS சமூகமளிக்க வேண்டுமென அழைப்பாணையில் கேட்கப்பட்டிருந்தது.

குழுவின் இடைக்கால அறிக்கை பராளுமன்றத்தில் 2008 டிசம்பர் 8ம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. இடைக்கால அறிக்கையின் 27 - 28 பக்கங்களில், பொலிஸ் திட்டம் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மேற்கோள்களும் கண்டுபிடிப்புக்களும் எவ்வித நியாயமுற்ற பிழையான தகவல்களாகும்.

எனவே இந்தப்பதில் அறிக்கை, அத்தகைய குறிப்புக்கள்ஒவ்வொன்றினதம் தொடர்பான TISL இன் அவதானிப்பைத் தெரிவிக்கின்றது. எமது நிலையை தெளிவுபடுத்துவது இதன் நோக்கமாகும். மேலும் குழுவானது பிரசுரத்தை தனது சரியான பெயரினால் அடையாளப்படுத்தவும் தவறியுள்ளது. (அதாவது சரியான நேர்மைத்திறனை நாடி பொலிஸ் ஊழலுக்கான காரணங்களை அடையாளம் காணுதல்). இதற்குப் பதிலாக ''இலங்கைப் பொலிஸார்'' என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1. <u>பூர்வாங்கப் பிரச்சினைகள்</u>

### 1.1 <u>எதிரான ஊடகப் பிரசாரம்</u>

தெரிவுக்குழு கூடிய சமயங்களில், TISL தொடர்பாக குழுவின் தலைவர் விஜித்த ஹேரத் பாராளுமன்ற உறுப்பினரை மேற்கோள் காட்டி பல விரோதமான அறிக்கைகள் ஊடகங்களில் காணப்பட்டன. எனினும் பாராளுமன்ற உரிமைகள் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பாராளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும்வரை, ஊடக அறிக்கைகள் ஒருதலைப்பட்சமாகவும், தவறுதலாகவும், நியாயமற்றதாகவும் இருந்த போதிலும், ஊடக அறிக்கைகளுக்கு TISL பதில் தருவதற்கு தடை விதிக்கப்பட்டது.

குழுவை 2007 மார்ச் 21ம் திகதி சந்தித்த TISL தூதுக்குழு, குழுவின் முன்னாளுள்ள விசாரணை பற்றி பாரதூரமான ஊடக அறிக்கை இருப்பது பற்றித் தெரிவித்தது. ஊடகம் அநேகமாக குழுவின் தலைவரை மேற்கோள் காட்டி, அல்லது குழுவின்

செயற்பாட்டுச் சுருக்கத்தை TISLக்கு விரோதமாக பிரசுரித்தது. TISL சமுகமளித்து எழுப்பப்பட்ட சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் திருப்திகரமான விளக்கம் அளித்த கூட்டம் பற்றி ஊடகம் பிரசித்தம் கொடுக்கவில்லை என்பது ஒரு சுவாரஸ்யமான விடயமாகும்.

இதன் பின்னர், 2007 மே 27ம் திகதி இடப்பட்ட சண்டே ரைம்ஸ் இல் குழுவின் கூட்டம் ஒன்று பற்றிக் குறிப்பிடுகையில் (இதில் TISL பங்குபற்றவில்லை) பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தது.

அ. இத்திட்டம் தொடர்பாக பொலிஸ் தலைமையகத்தில் உத்தியோகபூர்வ ஆவணங்கள் எதுவுமில்லை என்று பிரதி பொலிஸ்மா அதிபர் போதி லியனகே கூறியுள்ளார்.

ஆ. TISL மதிப்பீடுகள் நடத்துவதற்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்பது மீதான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு திரு. விஜிதா ஹேரத் பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

இ. சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, தகவல் எதற்காக சேகரிக்கப்படுகின்றது என்பது தெரிந்திருக்கவில்லை.

ஈ. அறிக்கையின் உள்ளடக்கத்தை எதிர்ப்பதற்கு இப்பொழுதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று குழுவின் அங்கத்தவரான பாராளுமன்ற உறுப்பினர் திரு. பிமால் ரத்னாக்க பொலிஸாரைக் கேடடுள்ளார்.

2007 ஜீன் 5ம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் மேற்படி அறிக்கை ஊடக சுதந்திரத்திற்கு அமைவானது என்று கருதுமானால், தகுந்த வழிகளில், இதனை எதிர்த்து அறிக்கையை வெளியிடவேண்டும் என்று TISL, குழுவிற்கு அறிவித்தது. இதன் பின்னர், குழுவிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்காததால், TISL அந்தக் கட்டத்தில் பாராளுமன்ற உரிமைகள் சட்டப் பிரகாரம் அறிக்கையின் உண்மைத்தன்மை பற்றி எதிர்பார்ப்பதில்லை என்று தீர்மானித்தது. TISL க்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்குமானால், குழு அந்த அம்சங்கள் குறித்து தவறாக வழிநடத்தப்பட்டதையும், பிரச்சினைகளைக் குழு முன்கூட்டியே தீர்மானித்துள்ளதையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துக் காண்பித்திருக்கும்.

**1.2 எந்தக் கட்டத்திலும், குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் பற்றி TISL க்கு அறிவிக்கப்படவில்லை**

TISLக்கு எந்தக் கட்டத்திலும், குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அறிவிக்கப்படவில்லை, இதற்குப் பதிலாக, சமூகமளிக்கும்படி எமக்கு அழைப்பாணைகள் விடுவிக்கப்பட்டன. TISL உத்தியோகத்தர்கள் சமுகமளிக்காத நிலையில் பல இனங்காணப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டமை பின்னர் தெரிய வந்தது.

இந்த ஆய்வை நடத்துமாறு அதிகாரம் வழங்கிய முன்னாள் பொலிஸ்மா அதிபரிடம் இருந்து குழு தகவலைப் பெறவேண்டுமென விசாரணையின் போது ஆலோசனை கூறப்பட்டது. முன்னைய பொலிஸ்மா ஆணைக்குழு இத்திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டு அது இது பற்றி நன்கு அறிந்திருந்தது என்பது TISLன் நிலைப்பாடாகும். இரு முன்னாள் பொலிஸ் அதிபர்களும் இத்திட்டத்திற்கான அதிகாரத்தை வழங்கி இருந்தனர். ஆனால் இடைக்கால அறிக்கையில் இவ்வாறு அதிசயமாகக் கூறப்பட்டுள்ளது.

> *''இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எவ்வாறு அங்கீகாரம் பெற்றார்கள் என்பது தொடர்பாக பிழையான தகவலைத் தெரிவித்துள்ளமையால், டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனலில் நேர்மைத்திறன' குறித்து குழு அதன் மீது குற்றம் சுமத்தவேண்டும்.''*

இந்தக் கண்டுபிடிப்பு எவ்வித அடிப்படையுமற்ற முற்றுமுழுதாகத் தவறானதாகும். முதலாவதாக TISL குழுவினால் கோரப்பட்ட சகல விடயங்களையும் சமர்ப்பித்தது. இரண்டாவதாக பொதுச் செலவில் நடத்தப்படும் எந்த ஒரு நிறுவனத்தையும் நுணுகி ஆராய்வதற்கு எந்தவொரு அரசாங்க நிறுவனம் அல்லது பாராளுமன்றத்திடம் அதிகாரம் பெறும் அவசியம் சிவில் சமூகத்திற்குக் கிடையாது என்ற அடிப்படைக்கோட்பாட்டு நிலைப்பாட்டை TISL கடைப்பிடிக்கின்றது. எவ்வாறாயினும் குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட கூட்டு இணைப்பே இந்த ஆய்வாகும். திட்டத்தை ஆரம்பிக்க எவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டது என்பது குறித்து எந்தச் சந்தர்ப்பத்திலும் பிழையான தகவலை வழங்கியது என்பதை TISL திட்டவட்டமாக மறுக்கிறது.

2007 மார்ச் 30ம் திகதி, TISL, குறிப்பாக TISL க்கு நடைமுறைகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் தெரியப்படுத்தப்படாததால், 2007 மார்ச் 21ம் திகதி, குழுவினால் எழுப்பப்பட்ட சகல பிரச்சனைகள் குறித்தும் அநுபந்தம் ஒன்றையும் சமர்ப்பித்தது.

### 1.3 TISL க்கு கிடைக்கப்பெறாத நடைமுறைகள்

2007 மார்ச் 22ம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம், TISL 2007 மார்ச் 21ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் குறிப்புகளை கோரியிருந்தது. ஆனால் 2007 மார்ச் 30ம் திகதியிட்ட குழுவின் கடிதப் பிரகாரம் TISLக்கு பின்வருமாறு அறிவிக்கப்பட்டது.

> *“ பாராளுமன்றக் குழுவின் நடைமுறைகளை பிரசுரிப்பது, உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கத்தக்க குற்றமாகும், பாராளுமன்ற (அதிகாரங்களும் உரிமைகளும்) சட்டத்தின் நிகழ்ச்சி நிரலின் 9ம் வாசக B பகுதி விதிகளுக்கமைய இது குற்றமாகிறது. இதனால் உங்கள் வேண்டுகோளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்”*

இதனால் குழுவினால் அழைக்கப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர், மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்ன தெரிவித்தார்கள் என்பது பற்றி TISLக்குத் தெரியவில்லை. எந்தவொரு நபர்/நிறுவனம் சம்பந்தப்பட்ட பாரதூரமான கண்டுபிடிப்புகளுக்கு இட்டுச்செல்லும் விடயத்தில் விசாரணை செய்யும் அதிகாரபீடம், பாதிக்கப்படும் தரப்பினருக்கு நடைமுறைகளையாவது சமர்ப்பிப்பதுடன், கிடைக்கப்பெற்றுள்ள விடயங்களுடன் அறிக்கைகளை மறுக்கும் கடமையையும் கொண்டுள்ளது. இந்த இயல்பான நீதியின் முக்கிய கோட்பாடுகளை குழு பின்பற்றத் தவறியுள்ளது.

### 1.4 TISL க்கு பொருத்தமற்ற அறிக்கை பற்றிய பொது விமர்சனங்கள்

மேலும் குழுவின் இடைக்கால அறிக்கை அதன் விதந்துரைகளில், அரசசார்பற்ற நிறுவனங்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. இவை எதுவும் TISLக்கு பொருந்தமாட்டா, ஏனெனில் TISL பிரபல கணக்காய்வு நிறுவனத்துடன் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன், வெப் தளம் உட்பட சகல வழிகளிலும் கணக்குகளை பிரசுரித்துமுள்ளது.

## 2. விசாரணையில் என்ன தெரியவந்துள்ளது

TISL உடன் தொடர்பான அமர்வுகளில், குழுவின் 26 அங்கத்தவர்களில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆகக்கூடியது 3-4 அங்கத்தவர்கள் பிரசன்னமாகவிருந்தனர். முதலாவது விசாரணைத் திகதியில் அதாவது 2007 மார்ச் 21இல், TISL தலைவர் (சபையின் நிறைவேற்று அதிகாரமில்லாத அங்கத்தவர்) 45 நிமிடங்களும் அழைக்கப்பட்டு, கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம் பற்றி ஆராயப்பட்டது. மற்றவர்கள் வெளியே காத்திருக்கிறார்கள் என்று கௌரவ பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்ட பின்னரே TISL இன் தூதுக்குழு அங்கத்தவர்கள் அழைக்கப்பட்டனர்.

குழுவுடனான சந்திப்பில் தாம் சகல கேள்விகளுக்கும் விளக்கம் அளித்தாகவும் குழுவினர், TISL இன் பணி குறித்து திருப்தி தெரிவித்தாதகவும் TISL நம்புகிறது.

TISL உத்தியோகத்தர்கள் 2007 யூன் 28 இல் அழைக்கப்பட்டமை மற்றுமொரு சந்தர்ப்பமாகும், அப்பொழுது ஒரு பணிப்பாளர் (முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர்) மற்றும் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் சிறிது நேரத்திற்கு அழைக்கப்பட்டனர். TISL இடமிருந்து மேலும் விளக்கத்தை குழு கோரவில்லை என்று அது கருதுகிறது.

## 3. பொலிஸ் திட்டம் ஏதாவது ஒரு வகையில், நாட்டின் சமூக நலனை பாரதூரமாகப் பாதிக்கின்றது?

TISL, பொலிஸ் திட்டம் தொடர்பாக பின்வரும் முக்கிய குறிப்புக்களை மீண்டும் வலியுறுத்துகின்றது.

அ. பொதுமக்களால் நிதியம் வழங்கப்படும் நிறுவனம் பொலிஸ் அமைப்பு, அது பொதுமக்களால் பரிசீலனை செய்யப்படவேண்டிய தேவையுள்ளது. 2001 இல் அரசியல் யாப்பில் 17ஆவது திருத்தச்சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட போது , பொலிஸ் திணைக்களம் சுதந்திரமாக பொறுப்புக்கூறும் செயன்முறைக்குட்பட்டதென உட்கிடையாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவுக்குரியதென கூறப்பட்டுள்ளது.

ஆ. இத்தகைய ஆய்வுகள், பொலிஸாரை ஒரு திறந்த அமைப்பாக நற்பெயர் பெறுவதற்கு உதவும். இலங்கை ஒரு செயற்பாட்டு ஜனநாயகம் என்று உலக சமூகத்தை நம்ப வைப்பதற்கும் அது உதவும்.

இ. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் கோட்பாட்டின் பிரகாரம், ஊழலை ஒழிப்பதற்கு அரசாங்கம் சிவில் சமுகத்துடன் சேர்ந்து பணியாற்றுவது அவசியம். எதிர்காலத்தில் பொது நிறுவனங்களுக்கும், சிவில் சமுகத்துக்குமிடையில் ஒருங்கிணைந்த முயற்சிகளை தடுப்பதற்கு நியாயமற்ற தலையீடானது நாட்டின் பிரஜைகளின் சமுக நலனையும், நாட்டின் நற்பெயரையும் பாரதூரமாக பாதிக்கும்.

ஈ. பொலிஸாரை மேம்படுத்துவதற்கான பொதுமக்களின் செயலெதிர் செயலானது, சமுகத்தில் பொலிஸாருக்கு கூடுதலான அங்கீகாரத்தை உருவாக்கும். உண்மையில் பொலிஸ் திட்ட அறிக்கையானது, இப்பொழுது அடிக்கடி கல்விமான்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. பொலிஸார் தமது தொழிலை திறம்படச் செய்வதில் உள்ள கஷ்டங்கள் பற்றி பொலிஸாரும், கொள்கை வகுப்போரும் புரிந்துகொள்ள அது உதவியுள்ளது. இதனால் இத்தகைய ஆய்வு பொதுமக்களின் நலனுக்கானது. இந்த ஆய்வுக்கு உதவியவர்கள் நேர்மையாக செயற்படுகிறார்கள்.

உ. அறிக்கையானது பொலிஸார் ஊழல் நிறைந்தவர்கள் என்று கூறுவதாக, அதனால் இலங்கை தோல்வி கண்ட நாடாகப் பெயரிடப்பட வேண்டும் என்று கருதுவதும் தவறாகும். அறிக்கை பொலிஸார் ஊழல் நிறைந்தவர்கள் என்று தெரிவிப்பதாக கருதுபவர்கள் அதனை வாசிக்கவில்லை அல்லது திட்டத்திற்கு சிறந்த விசுவாசத்துடனும், திணைக்களத்தின் நலனுக்காகவும் உதவிய உத்தியோகத்தர்களுக்கு எதிரான ஐயுறவுடனான ஒற்றர் வேலையை நடத்துவதற்கு உள்நோக்கத்துடன் அவ்வாறு தெரிவிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

### 4. “பொலிஸ் திட்டம்” எவ்விதத்திலாவது தேசிய பாதுகாப்பை பாரதூரமாகப் பாதிக்கிறதா?

பொலிஸ் திட்டம் தேசிய பாதுகாப்பை பாரதூரமாக பாதிக்கிறது என்ற குழுவின் முடிவுகள் முற்றிலும் தவறானதும், அடிப்படையற்றதுமாகும். இதனால் பின்வரும் பிரதான அம்சங்களுக்கு கவனம் செலுத்தும்படி கோரப்படுகின்றது.

அ. விசாரணையில் மீண்டும் மீண்டும், TISL உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்டபடி இந்த அறிக்கை பொலிஸாரிடமிருந்து பாதுகாப்பை முன்னிட்ட தகவல் எதனையும் கோரவில்லை.

கேட்டுப் பெறப்பட்ட தகவல் வருமாறு:

- பொலிஸாரின் நிறுவன அமைப்பு (உதாரணமாக ஆட்சேர்க்கும் நடைமுறைகள், பதவி உயர்வுத் திட்டம், சனநடமானத்திட்டம், ஒழுக்காற்றல் ஏற்பாடுகள்)
- பொலிஸாரின் கடமைகள் (உதாரணமாக குற்றச்செயல்களின் புள்ளி விபரங்கள், பொலிஸார் திறம்படச் செயலாற்றாமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட வழக்குகள், பொலிஸ் சமுக உறவு, ஒழுக்காற்றல் விசாரணைப் பட்டியல்)
- சாதகமான தகவல் (உதாரணமாக ஊழலை எதிர்ப்பதற்கான பொலிஸாரின் முயற்சிகள், மனித உரிமைகள் பாதுகாப்பு, பொலிஸாரின் நற்பெயரைக் கட்டி எழுப்புதல், திறமையையும், பயனுள்ள சேவையையும் மேம்படுத்தல்)

ஆ. இதற்கு மாறாக, ஒரு நாகரிகமான சமுகம், அல்லது செயற்படும் ஜனநாயகம் இந்தத் தகவல் சுதந்திரமாக மக்களுக்குக் கிடைப்பதை எதிர்பார்க்கிறது.

இ. திட்டமானது, பொலிஸ் உளவு, உணர்வுபூர்வமான தகவல் அல்லது விசேட அதிரடிப் படையின் செயற்பாடுகள் என்பவற்றைக் கையாளவில்லை.

ஈ. தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் மிக முக்கியமானவை, ஆனால், சட்டபூர்வமான தகவல் மறைக்கப்பட வேண்டும் என்பதும் பொதுமக்களுக்கு அத்தகைய தகவல் கிடைக்கக் கூடாது என்பதும் அர்த்தமாகமாட்டாது.

உ. பொலிஸ் திட்டமானது, மாசற்ற நேர்மைத்திறனுள்ள ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் ஏனையோரையும் உள்ளடக்கிய ஒரு குழுவினால் கையாளப்பட்டது. இதனால் அவர்கள் தேசிய பாதுகாப்பை பாரதூரமாகப் பாதிக்கும் விதத்தில் நடத்திருக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும். தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் உத்தியோகத்தர்கள், திட்டத்திற்கு உதவிய இரு பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோர், தேசிய பாதுகாப்பு விடயங்களை மனதில் வைத்து பொலிஸார், பொதுமக்களின் நலன் கருதிப் பணியாற்றினர் என்று கருதுவது நியாயமானதாகும்.

ஊ. குற்றச் செயல்கள், பயங்கரவாதம் என்பவற்றை எதிர்த்துப் போராடுகையில் பொலிஸார் திறம்படச் செயலாற்ற வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இத்தன்மை பற்றிய ஆய்வு, இலங்கைப் பொலிஸார் போதிய அளவு திறமை வாய்ந்தவர்களாக இல்லாதிருப்பதன் காரணங்களை அறிந்துகொள்ள உதவும். இதனால் இந்த ஆய்வு, தேசிய பாதுகாப்பிற்கு பொலிஸார் ஆக்கப்பூர்வ பங்களிப்பு வழங்க உதவும். இத்தகைய ஆய்வைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் செய்தியை எடுத்துச் செல்பவரை கொல்லும் ஒரு செயலாகும்.

## 5. நோரூட்டிடமிருந்து அன்பளிப்புக்கள்

*''நாட்டில் பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகளுக்கு உதவுவதாக அவப்பெயர் சூட்டப்பட்டுள்ள நோரூட் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு அரசசர்பற்ற நிறுவனங்களினூடாக இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது''* என்று இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பான TISL பின்வரும் பதிலை வழங்குகிறது.

முதலில் நோரூட் இத் திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. எவ்வித உதவி வழங்குனரும் இல்லாது வகுக்கப்பட்ட இத்திட்டத்தை அமுல்படுத்த TISL உதவி வழங்குனரிடமிருந்து நிதி கோரியது. திட்ட ஆலோசனைகளில் உள்ளடக்கத்தில் தலையீடு செய்யாத உதவி வழங்குனர் என்பதையிட்டு சர்வதேசரீதியான அங்கீகாரத்தை பெற்று நேர்மைத்திறனை நிரூபித்த அமைப்பு என்ற வகையில் உதவி வழங்குனர்களில் நோரூட்டை TISL தெரிவு செய்தது. போட்டி மனப்பான்மையுடன் சில அரசியல் சக்திகள் இந்த உதவி வழங்குனருக்கு எதிராக பொதுமக்களிடையே எதிரான அபிப்பிராயத்தை உருவாக்கியமை, சிவில் சமுகத்தை எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாது. உண்மையில் நோரூட் வெளிவிவகார அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, பிராந்திய கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, கடற்றொழில் நீர்வள அமைச்சு, கலாசார அமைச்சு, கலாசார நிதியம் என்பன உட்பட பல பொது நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது. இதனால் இத்தகைய வளத்திலிருந்து நிதியைப் பெற மறுப்பதற்கு நியாயமான காரணங்கள் எதுவுமில்லை. யோசனைகளை மறுபரிசீலனை செய்தல், நிபந்தனைகளை அங்கீகரித்தல், கொந்துராத்து செய்தல், பிரசுரிக்கப்பட்ட அறிக்கைகளைப் பெற்று இணங்கப்பட்ட கொடுப்பனவைச் செலுத்துதல் என்பன தவிர, கொந்துராத்தின் ஒரு பகுதியாக, செயற்பாடு, தீர்மானம் மேற்கொள்ளுதல், தகவல் பரிமாற்றம் என்பதில் நோரூட் எந்தப் பங்கும் வகிக்கவில்லை. இதனால் திட்டம் மூலம் உணர்வுபூர்வமான தகவலைப் பெறும் அக்கறையை நோரூட் கொண்டிருந்தது என்று கருதுவது தவறாகும். TISLக்கு உணர்வுபூர்வமான தகவல் கிடைத்தது, அவை நோரூட்டுக்குத் தெரிவிக்கப்பட்டன என்று குழு கூறியிருப்பதற்கு ஆதாரம் கிடையாது. TISL அழைக்கப்படுவதற்கு முன்னதாகவே, 2007 மார்ச் 11 திகதியிடப்பட்ட சிலுமினவில் இத்திட்டத்தின் மூலம் உணர்வுபூர்வமான தகவலை TISL நோரூட்டுக்கு விதந்ததாகவும், இவ்வாறு தகவலைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் நோர்வேயின் அரசசார்பற்ற நிறுவனத்திற்கும், TISL க்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று

கைச்சாத்திடப்பட்டிருப்பதாகவும் குழுவின் தலைவரை மேற்கோள்காட்டி செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## 6. திட்டத்தின் நேர்மை

பொலிஸார், சிவில் சமுகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியான பொலிஸ் திட்டத்தின் நேர்மைத்திறன் பின்வரும் விடயங்களில் பிரதிபலிக்கின்றது.

அ. 2002 பொதுமக்கள் பார்வையிலான மதிப்பீடு என்பதில் இனங்காணப்பட்ட தேவையின் விளைவாக திட்டம் உருவானது.

ஆ. பொலிஸாரும், பொதுமக்களுமே இத்திட்டத்தால் நன்மை பெறுகின்றனர். பொலிஸார் இத்திட்டத்தால் பெரிதும் நன்மை அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. பொலிஸாரின் முன் அங்கீகாரம் இல்லாமல் எந்த விடயமும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை. சகல கட்டங்களிலும் பொலிஸாரின் ஆலோசனை பெறப்பட்டது. உதாரணமாக, மதிப்பீடுகளுக்காக உபயோகிக்கப்பட்ட வினாக்கொத்து பொலிஸ்மா அதிபரினால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பிரசுரம் பூர்த்தி செய்யப்படுவதன் முன்னதாக நகல் அறிக்கை பரிசீலனைக்கும் விமர்சனத்திற்குமாக பொலிஸ் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதனை எதிர்க்க, சரிபார்க்க, மாற்றங்களைக் கோர, அல்லது தகவல், புள்ளிவிபரங்கள் என்பவற்றை நீக்குவதற்கு திணைக்களத்திற்கும் அதன் உயர் அதிகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஈ. பிரபல கணக்காய்வு நிறுவனம் பூரணமாகத் திட்டத்தை கணக்காய்வு செய்தது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும், கணக்காய்வு நிறுவனத்தின் முடிவுகள் திருப்தி தருவனவாக அமைந்தன.

## 7. பொதுமக்கள் தகவல் பெறும் வழியை ஏன் கொண்டுள்ளார்கள் என்பது பற்றிய விசாரணை

பொலிஸாரிடமிருந்து தகவல் வெளியிடப்படும் விடயத்தை அடிப்படையாகக் கொண்டது இவ்விசாரணையாகும். ஏந்தவொரு நாகரிகமுள்ள நாட்டிலும், பாராளுமன்றம் உள்ளிட்ட எந்தவொரு அரசாங்க பிரிவிலும் தகவல் உரிமை மதிக்கப்படுகின்றது. இந்த நாட்டின்

பொதுமக்களுக்கு, சட்டபூர்வத் தகவலையும் வழங்குவதைத் தடுக்கும் விளைவை இந்த விசாரணை கொண்டுள்ளது. இத்தகைய இரகசியச் சூழலில், அரசியல் கட்சிகள், அரச அதிகார சபைகள், சகல துறைகளையும் சார்ந்த அமைப்புக்கள் என்பன நிதி மாத்திரமல்லாது அதிகார துஷ்பிரயோகத்திலும் ஊழலில் தங்கியிருக்கும் நிலை ஏற்படுகிறது.

## 8. முடிவுரை

மேற்கூறிய கருத்துக்களின்படி குழுவானது TISL க்கு எதிரான முடிவுகளுக்கு வருவதற்கு முன்னதாக அதற்கு நியாயமான சந்தர்ப்பத்தை வழங்கத் தவறியதுடன், இயல்பான நீதிக்குரிய அடிப்படை விதிகளைப் பின்பற்றவும் இல்லை. திட்டத்தின் ஆக்கபூர்வ அம்சங்களையும், குழு வேண்டுமென்றே புறக்கணித்துள்ளது.

தகவல் சட்டத்திற்கான உரிமையை இலங்கை கொண்டிருக்காமலும் TISL தகவல் பெறுவதற்கு பொலிஸாரில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை இருக்கமாட்டாது. பொதுமக்களின் வெறுப்புக்கிணங்க, இலங்கையில் அரச அரங்கில் இரகசியம் ஆதிக்கம் செலுத்துகிறது. பாரளுமன்றத்தில் கிடைக்கும் சகல தகவல்களும், வாக்காளர்களுக்கும் சமமாகக் கிடைக்கப் பெறவேண்டும் என்று TISL கடுமையாக வலியுறுத்துகின்றது. இதனால் நாம், பாரளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கும் சகல தகவல்களும், பொதுமக்களுக்கும் கிடைக்கும் விதத்தில் தவலுக்கான உரிமைச் சட்டத்தை வகுக்குமாறு குழு பாரளுமன்றத்திற்கு விதந்துரை செய்யவேண்டும் என்று வேண்டும் விடுக்கின்றோம்.

இந்த முடிவுகளுக்கு குழு வந்துள்ள முறை தொடர்பாக TISL பின்வருவனவற்றைத் தெரிவிக்கின்றது.

அ. பாரளுமன்ற உறுப்பினர்கள் நடைமுறைகள் நடாத்துவது தொடர்பாகவும், அல்லது தமது அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலை முன்னேற்றுவதற்கு உரிமையுள்ள தகவலை துஷ்பிரயோகம் செய்வது என்பதைத் தவிர்ப்பதற்கு உறுதிப்படுத்தும் விதத்தில் பாராளுமன்றக் குழுக்கள் தொடர்பாக நேர்மையான, துலாம்பரமான நடைமுறை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

ஆ. தனிநபர்கள், அமைப்புக்கள் என்பவற்றுக்கு எதிராக கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளும் பாரளுமன்றத்தின் சகல குழுக்களும், வழமையான நீதியின் அடிப்படை விதிகளுக்கும் உயர்ந்த மரியாதை செலுத்த வேண்டும். (ஒருவர் தமது வழிக்கு

நீதிபதியாக இல்லாமல், முடிவுகளுக்கு வருமுன்னதாக சகலருக்கும் நேர்மையான சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும்.)

இ. புறம்பான அக்கறைகளினால், அல்லது அரசியல் சித்தாந்தங்கள், தொடர்புகள், குழு அங்கத்தவர்களின் கொள்கைகள் என்பவற்றினால் குழு தப்பெண்ணம் கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்துவது குழுவின் பாரிய பொறுப்பாகும்.

ஈ. பாராளுமன்றத்தின் எந்தவொரு குழு அறிக்கையும் தாக்கல் செய்யப்படும் முன்னர், பாராளுமன்றத்திற்கு அல்லது அதன் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்படும் எந்த விடயம் குறித்து பொதுமக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக பாராளுமன்ற உரிமைகள் அட்டவணையின் 9ம் பிரிவு B பகுதியின் ஏற்பாட்டுப் பிரகாரம் திருத்தம் செய்யப்படவேண்டும். இறுதியாக இரகசியமே வழமையான நியதி என்று கருதப்படும் ஒரு நாட்டில் "யார் இந்தத் தகவலை வழங்கினார்" என்ற கேள்வியை மையமாக கொண்டும் பொலிஸ் திட்டத்தினைப் பற்றிய குழுவின் நேர்மையற்ற முடிவுகளின் விளைவாக நாட்டில் மக்கள் தகவல் பெறுவதற்கான உரிமை மறுக்கப்படும் பாதகமான விளைவை பாராளுமன்றமும் குழுக்களும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்று TISL எதிர்பார்க்கின்றது.

ஜே.சி.வெலியமுன,
நிறைவேற்றுப் பணிப்பாளர்